1978 பிப்ரவரி 27]

திரு. ரெ. வீ. சௌந்தரராஜன் : அவர்களிலே ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆண்கள் 3,525 பேர்; பெண்கள் 6,083 பேர். அவர்களுக்கெல்லாம் வேலை தருவதற்கான வாய்ப்புகளை அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பதிவு செய்திருந்தும் கூட வேலை கிடைக்காமல் எவ்வளவோ தட்டெழுத்தர்கள் இருக்கிறார்கள். இன்றைய தினம் மேற்கு வங்க அரசு, பத்தாண்டுக் காலம் ஒருவர் வேலைக்காகப் பதிவு செய்திருந்து வேலை கிடைக்காத நிலை இருந்தால், அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் மாதம் 500 ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் அவர்களுக்கெல்லாம் மானியம் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதை போல் நம்முடைய மாநிலத்திலும் பத்தாண்டுக்காலம் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மானியம் கொடுக்கும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அத்தகைய யோசனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தட்டெழுத்தர் பிரச்சினை : திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் தட்டெழுத்தர் பற்றிய கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இன்றைக்குத் தட்டெழுத்தர்கள் அதிகமான பேர் பாஸ் செய்து விட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வளவு பேருக்கும் உடனடியாக வேலை கொடுக்க சாத்தியப்படாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இன்ஸ்ட்டிடியூட் வைத்துக் கொண்டு கொள்ளை லாபம் அடிப்பவர்களைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கொள்ளை லாபம் அடிப்பதாகச் சொல்லுவது சரியாக இல்லை என்று கருதுகிறேன். அவை முறையாக நடந்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன்.

'' அர்த்த சாஸ்திரம் '' மொழிபெயர்ப்பு.

* 289 வினு—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்னும் நூலை தமிழில் மொழி பெயர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் சாணக்கியம் பொருந்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அதனைத் தமிழில் மொழிபெயர்க்க அரசாங்கம் முன்வருமா? அரசாங்கம் இதைத் தமிழில் மொழி பெயர்க்க போவதாகத் பத்திரிகையில் ஒரு குறிப்பு வந்தது. அவ்வாறு தமிழில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய அவ்வளவு பெரிய அவசியம் இன்றைக்குத் தமிழகத்திலே இல்லை என்று கருதுகிறேன். அப்படித் தேவை என்றால்—கௌடில்யரையும் மிஞ்சுகின்ற அரசியல்வாதிகள் தமிழகத்தில் இருக்கிறார்கள் ; ஆகவே, தமிழிலேயே நூல் எழுதப்படலாம்.

*Posts of Engineers in Madras Corporation.*

*290 : *Q.*—THIRU R.E. CHANDRAN JAYAPAL : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has not given effect to G.O. Ms. No. 294, Public Works Department, dated 22nd February 1977 redesignating the posts of Supervisors as Junior Engineers, Junior Engineers as Assistant Engineers, Assistant Engineers as Assistant Executive Engineers and Executive Engineers as Assistant Divisional Engineers : and

(*b*) if so, the reasons for the delay?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம். மாநகராட்சி அரசாணையை இதுவரையில் செயல்படுத்தவில்லை.

(ஆ) சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் பொறியியல் பணியாளர்கள் தொடர்பாக பொதுப்பணித் துறையின் 22-2-77 ஆம் நாளிட்ட 294 ஆம் எண் அரசணையைச் செயல்படுத்துவது குறித்து சென்னை மாநகராட்சி ஆணையாளர் சில விளக்கங்களைக் கேட்டார். அவை அரசின் ஆய்விலுள்ளன. ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போன்று மாநகராட்சியிலே சுகாதாரத் துறையிலே இருக்கின்ற தலைமை அதிகாரிகள் இன்னும் பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள், இன்னும் 6 மாத காலத்தில் அவர்கள் ஓய்வு